பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 28 வியாழக்கிழமை (12.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 225

# தொப்பிகல முற்றாக மீட்பு படையினர் நேற்று அறிவிப்பு

## கிழக்கில் புலிகளின் கடைசித் தளமும் வீழ்ந்துவிட்டதாகத் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 12

தொப்பிகல (குடுமிமலை) பிரதேசத்தை முற்றாக மீட்டு விட்டதாக படையினர் நேற்று அறிவித்தனர்.

நாங்கள் தொப்பிகல்வை அடைந்துவிட்டோம். அதனைக் கைப்பற்றிவிட்டோம். இப்போது அங்கு புலிகளின் நிலைகள் எதுவும் இல்லை - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்று மாலை ரொய்ட்டருக்கு தெரிவித்தார்.

தொப்பிகலவைச் சூழவும் தொப்பிகலயிலும் புலிகளின் சிறு சிறு இருப்பிடங்கள் உள்ளன. அவற்றை நாம் அழித்து வருகிறோம்.

தொப்பிகலவின் மேற்குப் பக்கத்தை சுத்திகரிக்க வேண்டியுள்ளது. எனினும் தொப்பிகல கைப்பற்றப்பட்டுவிட்டது - என்றும் இராணுவப் பேச்சாளர் சொன்னார்.

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து தாம் 450 விடுதலைப் புலிகளை கொன்றுவிட்டதாகவும் 20 படையினர் பலியானதாகவும் படைத்தரப்புத் தெரிவித்தது.

ஆனால், விடுதலைப் புலிகள், தமது தரப்பில் 60 போராளிகளே மரணமானதாகவும் அதனைவிட 3 அல்லது நான்கு மடங்கு படையினரை அழித்துவிட்டதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்போது கிழக்கின் பெரும்பகுதியை

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் போர் உத்திகள் மாற்றப்பட்டுள்ளன இனி என்னவென்பதை பொறுத்திருந்து பாருங்கள்

### புலிகளின் இராணுவப்பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 12

"கிழக்கில் பல வாரங்களுக்கு முன்னரே கொரில்லா போர்முறைக்கு எங்களுடைய போர் உத்தியை மாற்றிவிட்டோம் - எனவே, எதிர்காலத்தில் எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துபாருங்கள்"

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் அரச படையினர் தொப்பிகலவை கைப்பற்றியது தொடர்பாக நேற்றுப்பி.பி.ஸிக்கு கருத்துக் கூறும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசு, கிழக்கில் நடத்துகின்ற போர் முடிவுக்கு வந்துவிட்டது எனக் கூறுகின்றது. ஆனால், அது உண்மை அல்ல - ஏன் என்றால் எங்களுக்கு 24 வருட கால அனுபவம் இருக்கிறது. கெரில்லாப் போர் அனு

(08ஆம் பக்கம் பார்க்க)

## படையினரை பாராட்டுகிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை 12

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கடைசிக் கோட்டையாக விளங்கிய தொப்பிக்கலவை மீட்டமைக்காக படையினருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நேற்று விடுத்த அறிக்கையிலேயே இந்த வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர், பொலிஸ், விசேட அதிரடிப்படை ஆகியோருக்கு மக்களுடன் சேர்ந்து தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவு இளைஞர் தூத்துக் குடியில் கைது

கொழும்பு,ஜூலை 12

தமிழகத்தில் தூத்துக்குடியில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடவுச்சீட்டு கைவசம் இல்லாத நிலையில், இந்த இளைஞர்நகரிலுள்ள பஸ் நிலையத்தில் நடமாடிய போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சமயம் இந்த இளைஞர் பொலிஸாரிடம் முரணான தகவல்களை வழங்கினார் என்று கூறப்படுகிறது. யாழ். நெடுந்தீவு ஏழாம் வட்டாரத்தைச்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பதிலடி கொடுக்க முனைந்தால் அதனை சந்திக்கவும் படையினர் தயார்

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கருத்து



கொழும்பு, ஜூலை 12

"கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் பதிலடித் தாக்குதலில் இறங்கலாம். ஆனால், படையினர் அந்த மாதிரியான சவால்களை சந்திக்கத்தயாராகவே உள்ளனர்."

- இவ்வாறு பாதுகாப்பு பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தொப்பிகல படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் நேற்று வந்ததையடுத்து பி.பி.ஸிக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள தாவது:-

கிழக்கு பாதுகாப்பு படையினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. நிச்சயமாக பின்வாங்கிச் செல்கின்ற விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பதிலடித் தாக்குதலில் இறங்கலாம்.

ஆனால், படையினர் அந்த மாதிரியான சவால்களை சந்திக்கத் தயாராகவே உள்ளனர். ஏன் என்றால், முழுமையான

(08ஆம் பக்கம் பார்க்க)

## அலம்பிலில் நேற்றுக் குண்டு வீச்சு பாடசாலை மாணவன் உட்பட இருவர் பலி

### தேவாலய குடியிருப்புக்கள், மீன் வாடிகள் சேதம்



காயமடைந்த பாலகன்...

முல்லைத்தீவுக்கு தெற்கே, அலம்பில் இராமசாமி தோட்டம் பகுதியில் அன்னை வேலாங்கன்னி தேவாலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள குடியிருப்புக்கள் மீது நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு 'கிபிர்' விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலில் பாடசாலை மாணவன் மற்றும் பெண் ஆகியோர் கொல்லப்பட்டனர். குழந்தைகள் உட்பட 11 பேர் படுகாயமடைந்தனர்.

அலம்பில் பகுதியை வட்டமிட்ட 'கிபிர்' விமானங்கள் மீன் வாடிகள் மற்றும் குடியிருப்புக்கள் அமைந்திருந்த பகுதிகள் மீது குண்டுவீச்சு நடத்தியுள்ளன. இத் தாக்குதலில் பாடசாலை மாணவனான ஆனந்தன் செல்வா (வயது 17) என்பவர் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார். படுகாயமடைந்த ஸ்ரீபால சுப்பிரமணியம் அகல்யா (வயது 51) என்ற குடும்பப் பெண் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளில் வைத்துக் கடத்தப்பட்ட மாணவர்கள் மூவர் 69 நாள்களின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

குடாநாட்டில் கடந்த மே மாதம் 4ஆம் திகதி இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளை அவர்களது வீடுகளில் வைத்து ஆயுத தாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட மூன்று பாடசாலை மாணவர்களும் நேற்று இரவு விடுவிக்கப்பட்டனர்.

ஒவ்வொருவரும் அவரவர் வீடுகளுக்கு அருகில் விடப்பட்டனர் என்று அறியவந்தது.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் உயர்தர வகுப்பில் கணிதப் பிரிவில் கல்வி பயிலும் கஸ்தூரியார்வீதியைச் சேர்ந்த குகராஜன்

(08ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் நேற்று 'பிரியாவிடை'ச் சந்திப்பு

## பேச்சுக்களை மீளத் தொடங்குவதில் நோர்வே ஆர்வமாகவே உள்ளது



கிளிநொச்சி,ஜூலை 12

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சை மீளத் தொடங்க வேண் டும் என்பதில் நோர்வே ஆர்வமாகவே உள்ளது.

இவ்வாறு இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு வந்த நோர்வேத் தூதரும் தூதரக அதிகாரிகளும் அங்கிருந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிறார்களை படைக்குச் சேர்ப்பது குறித்து ஐ.நா.சபைச் செயலாளருக்கு அறிக்கை

## சமர்ப்பிக்கத் தயாராகிறது யுனிசெவ்

இலங்கை அரசின் துணை இராணுவக் குழுவான கருணா குழுவினர் சிறார்களை படையில் சேர்ப்பது தொடர்பான புதிய அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகமான பான் கீ மூனுக்கு அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறார் படைச்சேர்ப்பு தொடர்பாக கருணா குழுவிற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் பாதுகாப்பு அமைப்பான யுனிசெவ் விற்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்று வரும் நிலையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இது தொடர்பில் யுனிசெவ்வின் கொழும்புப் பகுதியின் பாதுகாப்புத் தலைவரான அன்டி புறூக்ஸ் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் சிறார்களின் உரிமைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் செயற்குழு மீண்டும் ஒரு தடவை ஒக்ரோபர் மாதம் ஆராய உள்ளது.

இருந்தபோதும் மோதல்களில் பாதிக்கப்பட்ட சிறார்கள்தொடர்பான அறிக்கையை எதிர்வரும் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திடம் கையளிக்க உள்ளது.

கடந்த வருடம் சிறார்களை படையில் சேர்த்தமைக்காக இந்த அறிக்கையில் கருணா குழு இணைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது ஏதாவது ஆயுதக்குழுக்கள் சிறார்களை படையில் பயன்படுத்துகின்றார்களா என கண்காணிப்பதற்கு இவை முக்கியமான நாட்கள் ஆகும் என்றார் அவர்.

இதனிடையே கருணாகுழுவினர் தொடர்ந்து சிறார்களை கடத்தி வருகின்றனர் என தமக்கு சிறார்களின் குடும்பத்தினர் முறைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும், கிழக்குப் பகுதியில் ஆயுதம் தாங்கிய சிறார்கள் பிக்கப் வாகனங்களில் செல்வதனை தாம் தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றனர் எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.


### முக்கிய அறிவித்தல்

12.07.2007 நடைபெறவிருந்த **திரு. குகன்** ஆசிரியரின் பௌதிகவியல் பரீட்சையும், கருத்தரங்கும் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**NEW SCIENCE HALL**
**Jaffna.**

### CD கள் மூலம் Spoken English

வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ள சகல அடிப்படை பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் இலகுவான முறையில் தமிழ்மொழி மூலம் 4 ACD கள் + 20 VCD களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வேலையை எதிர்பார்ப்போர், வீட்டில் இருக்கும் பெண்கள், ஆங்கில வகுப்புக்குச் செல்ல கூச்சப்படும் வயது வந்தோர் ஆகியோருக்கு மிகவும் உகந்தது. ஆங்கில ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக அமையும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்கலாம். குடும்பமாகவும் ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ளலாம். முயற்சி உடையவர்கள் இதன்மூலம் நிச்சயமாக ஆங்கிலம் பேச கற்றுக்கெள்ளலாம.

முன்பதிவுகள் செய்து கொள்வதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும்

*முன்பதிவுகள் நடைபெறுகின்றன. முன்பதிவுசெய்யும் இடங்கள*

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை<br>பஸ் நிலையம்,<br>யாழ்ப்பாணம். | கத்தோலிக்க விற்பனை நிலையம் (பஸ்தியன் சந்தி)<br>360, பிரதான வீதி,<br>யாழ்ப்பாணம். 021 222 9041 |
| காருண்யா வைத்திய நிலையம்<br>சிவன் பண்ணை வீதி,<br>யாழ்ப்பாணம். 021 2223795 | காவேரி பார்மசி<br>கொக்குவில் சந்தி,<br>கொக்குவில். |
| ராஜலஷ்மி மலரி பலஸ்<br>நெல்லியடி, கரவெட்டி.<br>(பஸ் நிலையத்திற்கு முன்னால்) | மெடிலான்ட் பார்மசி<br>ஆலடி சந்தி, மானிப்பாய். |
| றேனி மூக்கு கண்ணாடி அகம்<br>கண்டி றோட், (AGA's Office அருகில்) சாவகச்சேரி. | Thurka Book shop<br>Bus stand Chunnagam.<br>021 222 6267 |
| றேனி மூக்கு கண்ணாடி அகம்<br>88, பிரதான வீதி,<br>பருத்தித்துறை. | மெடிலான்ட் பார்மசி<br>பிரதான வீதி, சங்கானை. |


# புளொட் ஏற்பாட்டில் வீரமக்கள் தினம் நாளை முதல் திங்கள் வரை அனுஷ்டிப்பு

கொழும்பு, ஜூலை 12

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 'புளொட்'டின் ஏற்பாட்டில் நாளை 13 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை - முன்னைய வருடங்களைப் போல இம்முறையும் - வீர மக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் ஊடகத் தொடர்பாளர் ம.பத்மநாதன் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழர் உரிமைப்போராட்டத்தில் தம் உயிரைத் தியாகம் செய்து களப்பலியான அனைவரையும் நினைவு கூரும் பொதுத் தினமாக, 1989ஆம் ஆண்டு புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட் டணியின் தலைவர் அ.அமிர்தலிங்கம், யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் ஆகியோரது நினைவு தினமான ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) ஸ்தாபகரும், செயலதிபருமான அமரர் தோழர் க.உமா மகேஸ்வரனது நினைவு தினமான ஜூலை 16 ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களை வீரமக்கள் தினமாக புளொட் அமைப்பு வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் வருடாவருடம் அனுஷ்டித்து வருகின்றது.

இம்முறை 18 ஆவது வீரமக்கள் தினத்தின் முதல் மூன்று நாள்களின் நிகழ்வுகளாக, இரத்த தானங்கள், சிரமதானங்கள், பொது மக்கள் சேவைகள் போன்றவை மேற்கொள்ளப்படும். இறுதிநாள் நிகழ்வாக போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து இயக்கத் தலைவர்கள், தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் கழகத்தின் அனைத்துமாவட்ட அலுவலகங்களிலும் நடைபெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைச் செயலாளராகவும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முதலாவது தலைவராகவும், ஏதிலிகள் மறுவாழ்வுக் கழகம், காந்தீயம் போன்ற அமைப்புகளின் நிறுவுனர்களில் ஒருவராகவும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஸ்தாபகர் மற்றும் செயலதி பருமாக விளங்கிய அமரர் தோழர் க.உமாமகேஸ்வரன் மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதியாவார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆயுதமேந்திய மக்கள் போராட்டமாக மிளிரச் செய்த செயலதிபர் உமாமகேஸ்வரன் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளோடும் உறவுகளைப் பேணிவந்ததோடு, தமிழ் மக்களது போராட்டத்தின் நியாயத் தன்மையை சிங்கள மக்களுக்கும், சிங்கள அரசியல்வாதிகளுக்கும் தெளிவுபடுத்தி ஏற்றுக்கொள்ள வைத்தவர். ஐக்கியமான போராட்டமே உண்மையான விடுதலைக்கு ஒரேவழி. 'ஒன்றாய் இன்றும் நாமில்லையேல் விடுதலை என்றும் நமக்கில்லை' என்னும் தீர்க்க தரிசனமான வார்த்தைகள் மூலம் இன்றைய தமிழ் மக்களது துன்பகரமான அவலநிலையை அன்றே கூறிவைத்தவர்.

1988 இல் அமரர் தோழர் க.உமா மகேஸ்வரனால் ஸ்தாபிக்கப்பட்ட கழகத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் சேவைகளை இன்றும் முன்னெடுத்துச் செல்கின்றது. 1990 இற்கு பிற்பட்ட காலங்களில் மக்கள் சேவைகளில் ஈடுபட்டிருந்த கழகத்தின் பல உறுப்பினர்களை எதிர்ச்சக்திகளின் நடவடிக்கைகளால் இழந்துவிட்ட நிலையிலும் தியாகங்களை அர்த்தமுள்ளவையாக எண்ணி தளர்ந்துவிடாது அவர்களது பணிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

16.07.2007அன்று வவுனியா கோவில் குளம் உமாமகேஸ்வரன் வீதியில் அமைந்துள்ள செயலதிபரின் சமாதி வளாகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

# காலியில் ஐ.தே.கட்சியின் ஆர்ப்பாட்டமும் கூட்டமும்

அரசைக் கவிழ்ப்பதற்கான பாரிய திட்டங்களை வகுத்துச் செற்பட்டுவரும் ஐக்கிய தேசியக் கட்சி, அதன் ஒரு கட்டமாக கடந் செவ்வாய்க் கிழமை காலியில் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றையும் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தியது. ஐக்கிய தேசிய கட்சியின் காலி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர், வஜிர அபயவர்தன இந்த ஆர்ப்பாட்டத்தையும் பொதுக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்திருந்தார்.

முதலில் ஆர்ப்பாட்டமும் அதனைத் தொடர்ந்து மாலைவரை பொதுக்கூட்டமும் இடம்பெற்றன. பொதுக்கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவும் கலந்துகொண்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான மக்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் 'வாழ்க்கைச் செலவை உடனடியாகக்குறை', 'பொய்யான யுத்தத்தை நிறுத்தி நிலையான சமாதானத்தை உருவாக்கு!', 'மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை நிறுத்து!' போன்ற - அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

## ஜெய்ப்பூர் கண்காட்சி இருதினங்கள் நீடிப்பு

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது 20 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் கண்காட்சி மேலும் இரண்டு தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

பலரின் வேண்டுகோளின் பேரில் இக் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறும் என்று நிறுவன முகாமைத் துவக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இக்கண்காட்சி இன்றுவரை நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (1)

## இன்று முத்தமிழ் விழா

சங்கானை, ஜூலை 12

சங்கானை சிவப்பிரகாச வித்தி யாலய தமிழ் இலக் கிய மன்றத்தினரால் நடத்தப்படும் முத் தமிழ் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய தமிழ் மொழி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கந்தையா கலந்து கொள்வார்.

(1-29)


வாருங்கள்! பிரவேசம் இலவசம்!!

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்"

**கியூடெக் - கரித்தாஸ்**

**விற்பனைக் கண்காட்சியும் மகளிர் ஆண்டு விழாவும்**

**இடம்: கியூடெக் வளாகம்**

**காலம்: 13, 14 ஆடி 2007**

**நேரம்: 9 முதல் 4.30 மணிவரை (இரண்டு தினங்கள்)**

*பிரதம விருந்தினர்:* மேதகு ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை

*சிறப்பு விருந்தினர்கள்:* திரு. கே.கணேஸ் *(யாழ். அரச அதிபர்)*
திருமதி தைவினி பொன்சேகா
*(தேசிய ஊக்குவிப்புத் திட்ட இணைப்பாளர், கரித்தாஸ். கொழும்பு)*

ஒரே குடையின் கீழ் மனித வலுவின் வெளிப்பாடுகளை எடுத்துரைக்கும் உயிர்ப்பூட்டல், மகளிர், சமாதானக் குழுக்களின் கண்காட்சியும் விற்பனையும்.

மலர் வெளியீடு, சேமிப்புப் பதிவேடு வழங்கல், விவசாயக் கண்காட்சி, முந்திரிகை வைன் அறிமுகம், கடல்வள கண்காட்சி, இரத்ததானம் பற்றிய விழிப் புணர்வு, மிதிவெடி விழிப்பூட்டல் (வெண்புறா அமைப்பு), மதுஒழிப்பு விழிப்பூட்டல் (அஸ்றியா நிறுவனம்), "நான்" உளவியல் சஞ்சிகை விற்பனை, சிறுவர் பகுதி, விற்பனைப் பகுதி யாவற்றிலும்

**பங்குகொண்டு பயனடைய வாருங்கள்!**

### மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1960, திருவாதிரை 3 ஆம் பாதம், கிரகபாவம் 38, 5'7", லண்டனில் குடியுரிமையுடைய சுப்பர் மார்க்கட் உரிமையாளருக்கு படித்த அழகிய மணமகளும் யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 இல் பிறந்த, பூராடம் 2ஆம் பாதம், கிரகபாவம் 51, 5'7"லண்டனில் நிரந்தர குடியுரிமையுடைய Computer Engineerக்கு படித்த ஆங்கில அறிவுள்ள மணமகளும் தேவை. [வெளிநாடு/ உள்நாடு]

தொடர்பு:
P.S.J.சிந்துஜன்
அங்களாவடி, வேலணை,
T.P.:0776184434, 0774447531
தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பின் நேரில் வரவும்

### கார் விற்பனைக்கு

மிகச் சிறந்த பாவனையில் மிக நல்ல நிலையில் உள்ள 2SRI XXXX (MINOR - 1000) கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077[illegible]
(62639)


# மரண அறிவித்தல்கள்

## நவரத்தினசிங்கம் மகேஸ்வரி

அரசடி வீதி, தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தம்மனை, அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினசிங்கம் மகேஸ்வரி நேற்று (11.07.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நவரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் ஹரிகரன், பாஸ்கரன், மஞ்சுளா, பாரதி ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரா, சசிகலா, சத்தியதாசன், மகேந்திரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.07.2007) வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணயளவில் அளவெட்டி, முள்ளானை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்மனை,*
*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

*தகவல்:*
**கணவர்,**
**பிள்ளைகள்.**

## செல்வராசையா மகேந்திரன் (A.C)

**(SENIOR DEPOT INSPECTOR)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசையா மகேந்திரன் (A.C) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசையா - சரஸ்வதியின் அன்பு மகனும் சிவகுமாரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சிவபாக்கியதேவியின் மூத்த மருமகனும் புவனேந்திரன், ரதி, சிவனேந்திரன், செல்வதி ஆகியோரின் சகோதரனும் அருந்ததி, சிவசீலன், கிஸ்ணமணி, பகீதரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2007) வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் வி.எம்.றோட் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வி.எம்.றோட்,*
*பருத்தித்துறை.*

*தகவல்:*
**ம.சிவகுமாரி.**
*(மனைவி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 4 ஆண்டுகளாக கட்டடப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை

## ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தாத நிலையில்

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2003ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்டடப் பணிகள், கட்டடத் திருத்தப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவற்றுக்கென வருடா வருடம் ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தப்படாமல் திரும்பப் போவதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களின் தொகையை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு வருடமும் சுமார் 55 மில்லியன் ரூபா நிதி கட்டட மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தில் கட்டடப் பணிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவேண்டிய தேவை உள்ளபோதும் கடந்த 2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தப்படாமல் போகின்றது.

இந்த ஆண்டும் கடந்த ஏழு மாதங்களில் இந்த அபிவிருத்திப் பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஆய்வுப் பணிகளுக்கென 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அவ்வாறான பணிகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. விளையாட்டு அபிவிருத்திக்கென ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அந்தப் பணிகளும் நடைபெறவில்லையென்று கூறப்படுகின்றது. (50)

# இலத்திரனியல் பொருள்களை விமானத்தில் கொண்டுவர பாதுகாப்பு அனுமதி தேவை

யாழ்ப்பாணம்,ஜூலை12

கணனி உட்பட இலத்திரனியல் பொருள்களைக் கொழும்பில் இருந்து குடாநாட்டுக்கு விமானம் மூலம் எடுத்துவருவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டுமென அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருவோர் தம்முடன் கணனி உட்படப் பல்வேறு இலத்திரனியல் பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டிய தேவை இருக்கவில்லை.

ஆயினும் தற்போது அவ்வாறான பொருள்களை விமானம் மூலம் எடுத்து வருவதானால், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பிலிருந்து இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுருவிலில் வரட்சி: கால்நடைகள் இறப்பு

குருநகர்,ஜூலை12

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள சுருவிலில் கடும் வரட்சி நிலவுகின்றது. இதனால் பாதிக்கப்பட்டுக் கால்நடைகள் பல இறந்துள்ளன.

தீவம் வடக்கிலுள்ள இக்கிராமத்தில் கடும் வெப்பமும் வரட்சியும் ஏற்பட்டுள்ளன. கிணறுகளும் குளங்களும் வற்றியுள்ளன. குடிதண்ணீர் இன்றி மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர். கால்நடைகளும் நீர் இன்றி அலைந்து திரிகின்றன. பல கால்நடைகள் இறந்துள்ளன. வெப்பம் காரணமாக கண்நோய், பொக்குளிப்பான், கூகைக்கட்டு போன்ற நோய்களும் பரவி வருகின்றன. (202)

## ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு மொழித்திறன் புத்தகம் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கென மொழித்திறன் பாடப் புத்தகம் வலயக் கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இப்பாடப் புத்தகங்கள் இன்று வியாழக்கிழமை பாடசாலைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (202-207)

## மத்தியஸ்தர் தின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை12

நல்லூர் மத்தியஸ்தர் சபை நடத்தும் மத்தியஸ்தர் தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம் பெறவுள்ளது.

நல்லூர் மத்தியஸ்தர் சபை தவிசாளர் மு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். (203)

# 50 வீதமான கிராம அலுவலர் பதவிகள் தென்மராட்சியில் வெற்றிடமாகவுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை12

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐம்பது வீதமான கிராம அலுவலர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

60 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் 34 கிராம அலுவலர்களே கடமையாற்றுகின்றனர்.

தற்போது கடமையில் உள்ள அனைத்து கிராம அலுவலர்களும் இரண்டு பிரிவுகளைக் கவனித்து வருகின்றனர்.

கிராம அலுவலர் இரண்டு பிரிவுகளினதும் கடமைகளை மேற்கொள்வதால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையின் நடமாடும் சேவைகள்

யாழ்ப்பாணம், ஜூலை12

இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையினர் கல்வயல் பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவையினை நாளை மறுதினம் சனிக்கிழமை கல்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் கல்வயல் விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த 27 விவசாயிகளுக்கு தலா 25ஆயிரம் ரூபா வீதம் விவசாயக் கடன் வழங்கப்படவுள்ளதாக சம்மேளனச் செயலாளர் கா.வேதநாயம் தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் சந்திரபுரம் சனசமூக நிலையத்தில் அப்பகுதியில் உள்ள முன்பள்ளிகளைச் சேர்ந்த 44 சிறார்களுக்கு சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

சந்திரபுரம் சனசமூக நிலையத்தினர் தமது நிதியிலிருந்து ஜோதி முன்பள்ளியைச் சேர்ந்த 16 சிறார்களுக்கு சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து சிறார்களின் பெற்றோர்களிடம் வங்கிக் கணக்குப் புத்தகங்களைக் கையளித்ததாக நிலையத் தலைவர் அன்ரனி தேவதாஸ் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சபீனா முன்பள்ளியைச் சேர்ந்த 16 சிறார்களுக்கும் அம்பாள் முன்பள்ளியைச் சேர்ந்த 12 சிறார்களுக்கும் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (202-207)

## தரம் 5 மாணவர்களுக்கு இன்று பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் வருடம்தோறும் தரம் 5 மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக இலவச பரீட்சையை நடத்தி வருகின்றது.

இப்பரீட்சை இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு உரிய பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

யாழ்., நல்லூர் வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பரீட்சைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் இது நடைபெறவுள்ளது. (203)

## மானிப்பாய் பிரிவில் சிக்குன்குனியா நோய் தடுப்பு நடவடிக்கை

குருநகர்,ஜூலை12

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் சிக்குன் குனியா நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முதற்கட்ட நடவடிக்கையாக அராலி, மானிப்பாய், சண்டிலிப்பாய், இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நுளம்பை ஒழிக்கும் நோக்குடன் இச்சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கான அனுசரணையை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் வழங்கவுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது. (202-51)

## ஓய்வூதியக் கொடுப்பனவு

குருநகர்,ஜூலை12

அரச ஓய்வூதியர்களின் இம்மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை சகல வங்கிக் கிளைகளிலும் வழங்கப்படவுள்ளது. (202-51)

## ஊர்காவற்றுறையில் சுகாதாரச் சீர்கேடு

குருநகர்,ஜூலை12

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள சந்தைகள், பஸ் நிலையம் ஆகியவற்றில் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருவதாகப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள மலசலகூடங்கள் சுத்தம் செய்யப்படுவதில்லை. நீர்த்தொட்டிகளிலும் தண்ணீர் இல்லை. இதனால் அப்பகுதி துர்நாற்றம் வீசுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202)




# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.பொது நூலகத்தில் கண்காட்சி

நல்லூர்,ஜூலை12

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நூலகக் கண்காட்சி யாழ்.பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் அண்மையில் இந்தியத் தூதரகத்தால் வழங்கப்பட்ட நூல்கள் மற்றும் இறுவட்டுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ நாடா வெட்டி கண்காட்சியை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இக்கண்காட்சியை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை -

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி மாநகர சபை ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்திய கலாநிதி எம்.மரியதாஸ் தலைமையில் தாய்மார்களுக்கான மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

குருநகர் பகுதியில் மாநகர ஊழியர்களும் பொதுமக்களும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (202-111)

# மதுபானங்களின் புதிய விலைகள் யாழ்.செயலகத்தால் நிர்ணயம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.மாவட்டத்தில் மதுபானங்களின் விற்பனை விலைகள் யாழ்.செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கமைய யாழ்.மாவட்ட உதவி மதுவரி ஆணையாளருடன் கலந்தாலோசித்து இந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இதற்கமைய மெண்டிஸ் அதிவிசேடம், றந்தனிகல அதிவிசேடம், **AEF** சாராயம் அதிவிசேடம், 33.5 மதுசார செறிவுள்ள அதி விசேட சாராயம் என்பவற்றின் மொத்த விற்பனை விலை 600 ரூபா. சில்லறை விற்பனை விலை 625 ரூபா.

மெண்டிஸ் விசேடத்தின் மொத்த விற்பனை விலை 700 ரூபா. சில்லறை விற்பனை விலை 725 ரூபா. பியரின் மொத்த விற்பனை விலை 200 ரூபா. சில்லறை விற்பனை விலை 225 ரூபா.

மதுபான விற்பனையில் ஈடுபடும் உத்தரவுப் பத்திரக்காரர்கள் குறிப்பிட்ட விலைகளிலேயே விற்பனை செய்யவேண்டும். தவறும் பட்சத்தில் உத்தரவுப் பத்திரத்தை இரத்துச் செய்ய திணைக்களத்திற்கு சிபாரிசு செய்யப்படும் என்றும் —

விலைகள் தொடர்பான முறைப்பாடுகளை யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் 021 222 3451, 021 222 8000, 021 226 4222 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் என்றும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (202)





உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி யாழ்.பொதுநூலகத்தில் நடைபெறும் நூலகக் கண்காட்சியை யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ நாடாவெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் -
கண்காட்சியை மக்கள் ஆர்வத்துடன் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
மாநகர சபை சுகாதார நிலையத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மாநகர சபை வைத்திய அதிகாரி எம்.மரியதாஸ தாய் ஒருவரைப் பரிசோதனை செய்வதை அடுத்துள்ள படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பெயரைப் பயன்படுத்தி வேலை பெற்றுத் தருவதாக மோசடி

## தேரர் உட்பட மூவருக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 12

துறைமுகம் மற்றும் விமானத்துறை அமைச்சர் சாமல் ராஜபக்ஷவின் பெயரைப் பயன்படுத்தி துறைமுகத்தில் வேலைபெற்றுத் தருவதாக நான்கு பேரை ஏமாற்றினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூன்று நபர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையும் 2 லட்சத்து 50ஆயிரம் ரூபாய் ஆதனப்பிணையும் விதித்தார் கொழும்பு துறைமுக நீதிமன்ற நீதிவான் நிமல் பண்டார பலல்ல.

இந்த மூன்று நபர்களும் நான்கு நபர்களிடம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றி விட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கொட என்ற இடத்தைச் சேர்ந்த குணாதர்தேரர் டி.உபுல் பிரியாந்த மற்றும் தலங்கமயைச் சேர்ந்த எம்.டி.எல்.சூரியவன்ச ஆகியவர்கள் தொடர்பாக கொல்லுப்பிட்டி பொலிஸில் செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டின் மீது மூவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட னர்.

துறைமுக அதிகாரசபையில் இரண்டு சாரதி பதவிகளும் இரண்டு தொழிலாளர் பதவிகளும் பெற்றுத் தருவதாக அமைச்சர் பெயரைப் பயன்படுத்தி கடிதங்களில் முத்திரையொட்டி உறுதியளித்திருந்தார்கள் என்று பொலிஸ்தரப்பில் கூறப்பட்டது. (ப)

## சட்டத்தரணிகள் சங்கம் குற்றவியல் அவதூறுச் சட்டத்திற்கு எதிர்ப்பு

கொழும்பு ஜூலை 12

குற்றவியல் அவதூறு சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்து ஊடகத்துறையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயல்வதாக மக்களின் சட்டத்தரணிகள் சங்கம் என்ற அமைப்பு கண்டித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள சட்டத்தரணிகளை உள்ளடக்கிய சுயாதீன அமைப்பாக இச் சங்கம் செயல்படுகின்றது.

வரலாற்றில் வேறு எப்போதையும் விட இப்போது ஊடக சுதந்திரம் நேரடியாகவும் மறை முகமாகவும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்று அச் சங்கத்தின் செயலாளர் சட்டத் தரணி பராக்கிரம ராஜபக்ஷ ஓர் அறிக்கையில் கூறியுள்ளார். (ப)

### ஈர விழிகளுடன் ஈராண்டின் இதய அஞ்சலி

அன்னை மடியில் 27 ★ 11 ★ 1906



ஆண்டவன் திருவடியில் 03 ★ 07 ★ 2005

**திருமதி சின்னம்மா நமசிவாயம்**

மலாயன் ஒய்வூதியர்

*(திதி: ஆனி மாத அபர திரயோதசி- 12.07.2007)*

'ஆலிலை பூவும் காயும்
அழிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சியெல்லாம் வந்து
தங்குடி யென்றே சாற்றும்
வாலிபர் கூடி வந்து
இருப்போர் கோடா கோடி
ஆலிலை யாதி போனால் அங்கு
வந்திருப்போர் யாருமுண்டோ"

ஈராண்டு நினைவலையில்
இறைஞ்சுகின்றோம் இறையருளை
ஏழேழு ஜென்மமும்
எம்முடனே துணையிருப்பீர்.

என்றென்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

தகவல்: நந்திகா (பேத்தி).
"இந்திரகிரி", வதிரி, கரவெட்டி.

(62635)


பங்களூர் பல்கலைக்கழகத்தில் பயிலுங்கள்

**Brindavan College**

Approved by AICTE, Recognised by Govt. and Affiliated to Bangalore University
*Accredited "A" level by NAAC (National Assessment and Accreditation Council)*

2nd Cross, Vinayaka Layout, Bhoopasandra, RMV 2nd Stage, Bangalore - 560 094, India
Tel : 0091-80-23414557, 23417833 Fax : 0091-80-23417832
E-mails : info@brindavancollege.com enquiry@brindavancollege.com

ஆண் & பெண்களுக்கான அனுமதி ஆரம்பம் 08-2007

**PRE-UNIVERSITY COURSES (11th and 12th Standard)**

- PCMCs — Physics, Chemistry, Mathematics, Comp.Sc
- PCMB — Physics, Chemistry, Mathematics, Biology
- PCBHSc — Physics, Chemistry, Biology, Home Science
- BACS — Business Studies, Accountancy Comp.Sc., Statistics

**UNDER-GRADUATE COURSES (UG)**

- B.Sc. Biotechnology
- B.Sc. Microbiology
- B.Sc. Genetics
- B.Sc. Computer Science
- B.C.A. Bechelor of Computer Applications
- B.Com Bechelor of Commerce
- B.B.M. Bechelor of Business Management

**POST-GRADUATE COURSES (PG)**

- MBA Master of Business Administration: Marketing, Human Resource Management, Finance
- M.Sc Master of Science: Biotechnology, Microbiology, Applied Genetics
- MCA Master of Computer Applications

இலவசக் கருத்தரங்கும் உடன் அனுமதியும்
2007 ஜூலை 15 (ஞாயிறு) முற்பகல் 10.00
இடம்: கொழும்பு ஹில்ரன் - கொழும்பு
நடத்துவோர்: அதிபர்/தலைவர்

■Final Opportunity to Join for Academic Year 2007-08. ■Opportunity to Study with 45 nationalities. ■Study with more than 200 Sri Lankan Students. ■ About 600 Sri Lankan students have graduated from the college. ■Degree recognized by UGC -Sri Lanka. ■Students with 2 A/L passes or pending results can register for UG courses and save one year. ■ Registration Fee US$ 100 (or equivalent) for students join at the Seminar.

**Company Secretarial Services (Pvt) Ltd**
**#285C-1/1, Stanley Tillakaratne Mw., Nugegoda.**
**Tel : 011-2854438 / 0777-317043**

இவ்வருட மே சேர்ந்து ஒரு வருடத்தைச் சேமியுங்கள் - சில

www.brindavancollege.com


### நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி நிகழ்வுகள்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபை நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கொக்குவில் பொது நூலகத்தில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் மத்திய மருந்தகத்தில் டெங்கு/ சிக்குன்குனியா நோய்கள் பற்றிய கருத்தரங்கு நடைபெறும். (202)


**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

897 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் **40 50 53 55**

10-07-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4151240 - 4166407

ஜக்பொட் பரிசு ரூபா.5,994,100/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 334,224 | 10/- | 3,342,240/- |
| 2 இலக்கங்கள் | 30,594 | 20/- | 611,880/- |
| 1 இல. + லக்கினம் | 30,109 | 30/- | 903,270/- |
| 2 இல. + லக்கினம் | 2,799 | 100/- | 279,900/- |
| 3 இலக்கங்கள் | 815 | 500/- | 407,500/- |
| 3 இல. + லக்கினம் | 64 | 5,000/- | 320,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,994,100/- | - |
| மொத்தம் | | | 6,264,790/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 398,614 | | 7,288,290/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,366,925/-

தொடர் இல. 5040926 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஜூலை மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 4156379-7-30 |
| மாத்தளை | 4161013-9-20 |
| காலி | 4155936-6-88 |
| கம்பஹா | 4159079-6-74 |
| புத்தளம் | 4164923-7-97 |


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சகுந்தலாதேவி தங்கராசா



நயினாதீவு, 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், குமரபுரம், பரந்தனை சொந்த வசிப்பிடமாகவும், தற்சமயம் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலாதேவி தங்கராசா நேற்று (11.07.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - பராசக்தி தம்பதியரின் மகளும், முத்துலிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் தங்கராசாவின் பாசமிகு மனைவியும், சங்கீதா, இந்துசன, விதுர்சன், ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற தவயோகலெட்சுமி, மற்றும் நித்தியலெட்சுமி (லண்டன்), தியாகேசன் (இத்தாலி), வாகீசன் (டென்மார்க்), விஜயலட்சுமி (பிரான்ஸ்), பாக்கியலெட்சுமி (லண்டன்), ரமேசன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கனகநாதன் மற்றும் கேசவராணி (இத்தாலி), சிவரஞ்சனி (டென்மார்க்), ஸ்ரீகாந்தராசா (லண்டன்), வசந்தகுமார் (இத்தாலி), இராசேந்திரன் (பிரான்ஸ்), கிரிசாந்தி (கனடா), லீலாவதி, விஜயலெட்சுமி, விவேகானந்தன் ஆகியோரின் மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு.

தகவல்:
சி.பொ.சுப்பிரமணியம் (தந்தை),
மு.தங்கராசா (கணவர்).

(62630)

## பொன்னையா சிவயோகசுந்தரம்



யாழ்ப்பாணம், கைதடியைச் சொந்த இடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவரும் கொழும்பு, புறாக்பொன்ட் கம்பனியில் கடமையாற்றியவருமான பொன்னையா சிவயோகசுந்தரம் 10-07-2007 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான பொன்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், ஓய்வுபெற்ற ஆசிரியை பொன்னம்மாவின் (கொழும்பு சென்கிளயேஸ் கல்லூரி) பாசமிகு கணவரும், பத்மாவதியின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம், சின்னத்தம்பி,தேவராஜா(ஜேர்மனி), முத்துக்குமாரசுவாமி, மயில்வாகனம் (ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி), தங்கம்மா ஆகியோரின் மைத்துனரும், கனடாவில் வசிக்கும் ரவீந்திரா, ரதி, கணேந்திரன், யசோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்சினி, ஸ்ரீஅருள்நாதன், ரமணன், சண்முகப்பிரியா ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரது பூதவுடல் 14ம், 15ம் திகதிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டு 16-07-2007 திங்கட்கிழமை இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனடா T.P.No
001-416-438-8394 மனைவி,
001-905-943-9160 மகன் - ரவீந்திரா,
001-905-471-7541 மகள் - ரதி,
001-416-792-6846 மகன் - கணேந்திரன்,
001-416-286-8256 மகள் - யசோதா.

தகவல்
மனைவி, மக்கள், மருமக்கள்
(கனடா)

(62629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எக்ஸ்போ' விமான சேவை புதிய அலுவலகம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

'எஸ்போ' விமான சேவை நிறுவனத்தின் புதிய அலுவலகம் இல. 144, பிறவுண் வீதியில் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

'ரெலிக்கொம்' நிறுவனத்தின் யாழ். பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என். சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய அலுவலகத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

'எக்ஸ்போ' விமான சேவை நிறுவனத்தின் யாழ். முகாமையாளர் கே. வசிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அந்த நிறுவனத்தின் பயணிகள் நடவடிக்கைக்கான பணிப்பாளர்சிராஜ்முகமட் மற்றும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வங்கிகளின் முகாமையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட னர்.

புதிய அலுவலகத்தில் முதலாவது விமானப் பயணச் சீட்டை 'ரெலிக்கொம்' முகாமையாளர் என். சரவணபவன் பெற்றுக்கொண்டார். (50)



'எக்ஸ்போ' விமான சேவை நிறுவனத்தின் புதிய அலுவலத்தை 'ரெலிகொம்' நிறுவனத்தின் யாழ். பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சரவணபவன் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் 'எக்ஸ்போ' நிறுவனத்தின் பணிகள் நடவடிக்கைக்கான பணிப்பாளர் சிராஜ் முகமட், யாழ். அலுவலக முகாமையாளர் கே.வசிகரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# ஏ-9 பாதையைத் திறந்து பௌத்த யாத்ரீகர் வருகைக்கு வழி செய்க!

## நாகவிகாரை பிரதம குரு அரசை வற்புறுத்துகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஏ-9 பிரதான வீதியைத் திறந்து தெற்கிலுள்ள பௌத்த மக்கள் வடபகுதியிலுள்ள பௌத்த தலங்களுக்கு யாத்திரை செய்வதற்கு வசதி செய்து கொடுக்கும்படி ஸ்ரீ நாக விகாரை அபிவிருத்தி சபையின் தலைவரும் வடமாகாண பிரதம சங்க நாயக்கருமான வண. மிக ஹாஜந்துரே குணரட்ண தேரர் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

இந்த நாட்டு பௌத்தர்களுக்கு மிகவும் அருமையான நாகவிகாரை உட்பட வடக்கிலுள்ள பௌத்த ஆலயங்களை பராமரிப்பது மிகவும் கஷ்டமாக விருக்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஏ-9 பாதைத் திறந்திருந்த போது ஆயிரக் கணக்கான தென்னிலங்கை யாத்ரீகர்கள் வடகிலுள்ள பௌத்த கோயில்களுக்கு வருகை தந்திருந்தார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ப)

## தரம் ஒன்று மாணவர் அனுமதிக்கான

# விண்ணப்பங்கள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் கோரப்படலாம்

மாணவர்களை தரம் ஒன்றுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் நடுப்பகுதி அளவில் கோரக்கூடியதாக இருக்கும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மாணவர்களை தரம் - 1 வகுப்புக்கு அனுமதிப்பதற்கான புதிய நடைமுறை ஒன்றை உருவாக்குவதற்கான கல்வி அமைச்சின் ஆலோசனைகளும் ஜனாதிபதி செயலத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதியின் செயலகம் தனது புதிய திட்டத்தை விரைவில் உயர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கும் என்றும் தெரிவித்தார்.

உயர்தர வகுப்பு பரீட்சைகளையொட்டி நீண்ட விடுமுறையொன்று வரவிருக்கின்றது. ஓகஸ்ட் 8 அல்லது 10 ஆம் திகதியளவில் விண்ணப்பங்களைக் கோரக்கூடியதாக இருக்கும். அதன்பின்னர் இப்பணிகளைசெய்து முடிக்க போதிய அவகாசம் இருக்கும் - என்றார் அமைச்சர். (ப)

# வாசகர் திருமுகம்

## ஒரு கல்லூரி மாணவனின் ஆதங்கம்

எமது கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் 2009 ஆண்டுக்கான கணிதபாடம் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் தனக்கு தரமான மாணவர் வகுப்பு ஒதுக்கப்படவில்லை என்று காரணத்தைக் காட்டி (அதாவது O/L வகுப்பில் $7^A$ சித்திபெய்திய மாணவர்களைக் கொண்ட) கடந்த இரண்டு மாதங்களாக $12^B$, $12^C$ என்ற இரண்டு பிரிவுக்கும் பாடம் கற்பிக்கச் செல்லாது தனிநபர் பகிஷ்கரிப்பு நடத்திவருகின்றார். இப்பிரச்சினையை பாடசாலை நிர்வாகம் தட்டிக்கேட்பதற்கோ மேல் அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கோ சக்தி அற்றவர்களாக இருக்கின்றார்கள். இதுபற்றி பல தடவை சம்பந்தப்பட்ட ஆசிரியருடன் மாணவரும், சக ஆசிரியரும் பேச்சுவார்த்தை நடத்தி பலனற்றுப் போய்விட்டது. இதுபோன்ற படித்த ஆசிரியர்களுக்கு- மாணவர்களுக்கு படிப்பிக்கவேண்டிய ஆசிரியர்களுக்கு யார் தான் படிப்பிப்பது? கல்வியை இவ்வாறும் சீர்குலைப்பதா? இவ்வாசிரியர் தனியார் கல்வி நிலையத்திலும் $7^A$ எடுத்தவர்களுக்குத்தான் பாடம் எடுக்கின்றாரா? தமிழ் மாணவருக்கு தமிழ் ஆசிரியர் எதிரியாவதா? படிக்கத் துடிக்கும் மாணவர்களுக்கு விடைதான் என்ன?

கொக்குவில்

- ஒரு மாணவன்

## இருட்டில்தானே வெளிச்சம் தேவை!

இருட்டில்தான் வெளிச்சம் தேவை. ஆனால் யாழ். மாவட்டத்தில் இருளும் போது? அதுவும் சரியாக 6 1/2 மணிக்கு மின்சாரத்தைத் துண்டிக்கின்றார்கள். இது நியாயமா?. துண்டிக்கும் போது சரியாக 6 1/2 மணிக்கு துண்டிக்கின்றார்கள். ஆனால் மின்சாரத்தை வழங்கும் போது அவர்கள், நினைத்த நேரம் தான் மீண்டும் வரும். அத்துடன், எந்த நாள்களில் மின்வெட்டு என்பது நிர்ணயம் இல்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மூலப்பொருள் கல்வி, பாடசாலையில் பிள்ளைகள் படித்த பாடங்களை மீட்கமுடியாது. பாடசாலையில் கொடுத்த வீட்டு வேலையைச் செய்ய முடியாது. பெற்றோர் இரவில் பிள்ளைகளுக்கு கல்வி சம்பந்தமாக எந்த வித உதவிகளையும் செய்யமுடியாது.

இரவில் கணனியை இயக்கமுடியாது. ஒருவர் தனது அலுவலகக் கடமை முடிந்து வீட்டுக்கு வந்து கணனியில் எதுவித செயற்பாடும் செய்யமுடியாது. எமது இளம் சமூகத்தினர் வீட்டுக்கு ஒரு கணனியை வைத்துள்ளார்கள். அதில் எந்தக் கருமமும் செய்யமுடியாது. எல்லாக் கருமங்களையும் பகலில் Net Cafe இல் தான் செய்ய வேண்டியுள்ளது. அதற்கும் பணம் வேண்டும்.

அத்துடன், நேரம் இல்லை. காலையில் வேலைக்கு செல்வதற்கு உடுப்புக்களை ஸ்திரிக்கை செய்யமுடியாது. ஏன் இந்தச் சோதனை. மின் அத்தியட்சகரே தயவு செய்து இதற்கு விரைவில் முடிவு காணுங்கள்.

அரியாலை

- மயில் நீதன்.

# மாட்டு வண்டிச் சவாரி போட்டிகளை மீண்டும் நடத்துவதற்கு முயற்சி

## ஊரடங்கு நேரத்துடன் அமுல் செய்யப்படுவதால் சிரமம்

வலி.தென்மேற்கு, ஜூலை 12

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தின் பின்பு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கைவிடப்பட்டிருந்த மாட்டு வண்டிச் சாவரிப் போட்டிகளை மீண்டும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த பல வருட காலமாக நீர்வேலி தரவைப் பகுதி, கந்தரோடை தரவைப்பகுதி, மூளாய் - பொன்னாலை தரவைப் பகுதி ஆகிய இடங்களில் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டிகள் அடிக்கடி நடத்தப்பட்டு வந்தன.

இதனால் சவாரி மாடுகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டதுடன் அவற்றின் விலைகளும் அதிகரித்திருந்தன. ஒரு தரமான சாவரி மாடு 75 ஆயிரம் ரூபா முதல் 80 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. சவாரிப் பிரியர்கள் இப்போட்டிகளை மீண்டும் நடத்துவதற்கு பெரு முயற்சி மேற்கொண்டனர். இதன் ஓர் அங்கமாக கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கந்தரோடை தரவை பகுதியில் மாட்டு வண்டி சாவரிப் போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது. இதில் சுமார் 12 மாட்டு வண்டிகள் கலந்துகொண்டன.

தற்போதுள்ள ஊரடங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்படுமானால் ஏனைய இடங்களிலும் இப்போட்டியை நடத்த முடியும் என்று சவாரி ஏற்பாட்டாளர்கள் கருதுகின்றனர்.

மாட்டு வண்டி சவாரிப் போட்டிகள் மாலை வேளைகளிலேயே நடத்துவதற்கு உகந்த நேரமாகும். போட்டி முடிந்து மாட்டு வண்டிகள் திரும்பி தமது சொந்த இடங்களுக்கு செல்ல நேரம் போதாது என்றும் ஏழு மணிக்கு ஊரடங்கு அமுல் செய்யப்படுவதனால் அதற்கு முன்னர் உரிய இடங்களுக்கு மாட்டு வண்டிகளும் மக்களும் போய்ச் சேர வாய்பில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (50-135)

## முன்பள்ளி விளையாட்டு விழா

சுழிபுரம், ஜூலை 12

சங்கானை உருத்திரா முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா சங்கானை காலாசர மண்டப மைதானத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திருமதி. தர்சினி சதீஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேசசபை செயலாளர் இ. இராசதுரை கலந்து கொள்வார். (50-28)

## ஹொக்கி, ரெனிஸ் சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் ஆனந்த ரட்ணம் ஞாபகார்த்த ஹொக்கிச் சுற்றுப்போட்டி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் லூதர் செல்வராஜா ஞாபகார்த்த ரெனிஸ் சுற்றுப்போட்டியும் எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

எனவே ஹொக்கிப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னரும், ரெனிஸ் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னரும் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஹென்றிஸ் - யூனியன் அணிகள்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் வலிகாமம் கல்வி வலய 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான மூன்றாம் இடத்துக்கான ஆட்டமும், இறுதியாட்டமும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும் இப்போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.

3ஆம் இடத்திற்கான போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டியில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதவுள்ளன. (50-86)



கல்வித் திணைகளத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான [illegible] போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி மாவட்டச் சம்பியனாகத் தெரிவானது. கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோருடன் அந்த அணியினர் எடுத்துக் கொண்ட படம் இது.

## விளையாட்டு

# பற்றிக்ஸ் - கொக்குவில் இந்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் பாடசாலை அணிகளுக்கிடையிலான 17 வயதுப் பிரிவுகளுக்கான கிரிக்கெட் போட்டியொன்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 48.4 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பி. நவநீதன் [illegible] ஓட்டங்களையும், எம். மனோஜ் 41 ஓட்டங்களையும், எம்.ஏ. நிலோசன் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய பிறேம்நாத் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 59 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் எஸ். நிரோஜன் 30 ஓட்டங்களையும், எஸ். பிறேம்நாத் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய வி.ஜே. கேதீசன் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் எல். கஜமுகன் 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பறினார்கள்.

இரு அணிகளுமே முதல் இனிங்சில் எதிரணியினரின் அனைத்து விக்கெட்டுக்களையும் கைப்பற்றாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The phone Shop Manipay

எம்மிடம் சகலவிதமான Hand Phone களும்
* Soft ware * Hard ware Repairing செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு:- Nokia, 6630, 6680, 6681, N70, N91
என்பன Unlock செய்து கொடுக்கப்படும்.

Address: **The Phone Shop**
Alady Junction, Manipay.
T.P.No. 0777571910 (62457)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 09 * 04 * 1960



உதிர்வு 12 * 07 * 2006

**அமரர் செபஸ்ரியன் வோல்ற்றர் இருதயராஜன்**

பண்பின் சிகரமாக வாழ்ந்து
பரிவிற்கு உதாரண மாய்
பாசத்தின் உறை விடமாய்
யாவருக்கும் இனியவராய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டானதோ.

48, மாட்டீன் றோட்,
யாழ்ப்பாணம். (62615) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் ஹரிச்சந்திரன்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் லண் டனை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் ஹரிச்சந்திரன் கடந்த (08-07-2007) ஞாயிற்றுக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமானந்தம் - சிவயோகம் தம்பதியரின் மருமகனும் கிறிஸ்ணதேவியின் பாசமிகு கணவரும், Dr.நிரோஷினி (லண்டன்), காலஞ்சென்ற திரியம்பகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவதனனின் (பொறியியலாளர் - லண்டன்) மாமனும் சந்திரரதி (அமெரிக்கா), சந்திரகலா(கனடா), செல்வச்சந்திரன் (பொறியியலாளர் - அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் Dr.கணேசன் (அமெரிக்கா), அப்புலிங்கம் (கனடா) நிரஞ்ஜினி (அமெரிக்கா), கோணேஸ்வரி (லண்டன்), கணேஸ்வரி (கந்தரோடை), தியாகேஸ்வரி (ஜேர்மனி), தர்மசெயன் (ஜேர்மனி), தெய்வேந்திரன் (சிவம், வத்தளை), ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் மகாதேவன், குமாரவேலு (ஜேர்மனி) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (16-07-2007) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

கந்தரோடை,
சுன்னாகம். (62609)

தகவல்:
**க.மகாதேவன்** (கெனடி).

## செல்வி சற்குணம் ரேனுகா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சற்குணம் ரேனுகா (10-07-2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சற்குணம் - பூரணம் தம்பதியரின் புதல்வியும் ஜெயமலர், காலஞ்சென்ற ஜெயக் குமார், தவமலர் (ரதிகா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விவேகானந்தராசா, கோமலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் நிரோசன் (மகாசில்க் புடைவை மாளிகை), நிசாந்தன், நிசாந்தினி, நிசங்கர், நிலாணி, டிலக்சி, டமானா ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-07-2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்மன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்புர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.ரி.எஸ்.லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (62625)

தகவல்:
**சற்குணம் - பூரணம்** (பெற்றோர்),
**ஜெயமலர்** (சகோதரி),
**நிரோசன்** (பெறாமகன்),

## சிவபாதசுந்தரனார் ஆறுமுகசிவம் (நவம்)



தொல்புரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கு, புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரனார் ஆறுமுகசிவம் (நவம்) லண்டனில் கடந்த (10.07.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரனார் (புலவர்) - பார்வதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் அமுதராணியின் அன்புக் கணவரும் அரவிந்தன், பிரியதர்சினி, சிவதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் துஷ்யந்தனின் (ஆசிரியர்) அன்பு மாமனும் துஷாந்தினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியை இன்று (12-07-2007) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

புத்தூர் கிழக்கு, புத்தூர்.
'மனோன்மணி வாசம்'
சுழிபுரம் மத்தி. (62632)

தகவல்:
**தாய், மனைவி, பிள்ளைகள்.**

## மல்லாகம் நீதிமன்றில் தங்க நகைகள் ஏலத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் எதிர் வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தங்க நகைகள் ஏலத்தில் விற் கப்படவுள்ளன.

வழக்கு ஒன்றில் உரிமை கோரப்படாத நகைகளே இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளன.

வழங்கப்படும் பொருள்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும்-

கொள்வனவு செய்பவர்கள் அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவேண்டும் என்றும்- நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (202)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச இலக்கிய விழா

கரவெட்டி,ஜூலை 12

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்த கலை, இலக்கிய விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் கலை நிகழ்வுகள், கலைஞர் கௌரவிப்பு போன்றவை இடம்பெறவுள்ளன. (202-70)

## ஏகம் அனேகம் அரங்க நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 12

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் 'ஏகம் அனேகம்' என்னும் தனியாள் அரங்க நிகழ்வு நடைபெறவுள்ளது.

அரங்க இயக்கத்தின் நிறைவேற்று இயக்குநர் தே.தேவானந்த் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினராக குழந்தை ம.சண்முகலிங்கம் கலந்துகொள்வார். (202)

## தவறிவிட்டது

ராவணேஸ்சேரி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த எம்.கே.ஜீவதாஸ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (461070345 V), வீபோ அடையாள அட்டை (091002732), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 10ஆம் திகதி நாம்பரிட்டியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கைதடி, நுணாவிலில் உள்ள அரசாங்க போராட்டக்குழுவில் ஒப்படைக்கவும் அல்லது தபாலில் சேர்க்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (62631)

## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர் மற்றும் பழக விரும்புபவர்களும் தேவை.
தொடர்பு:- த.குமாரசாமி அன்ரன்ஸ்,
248/1,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (62572)

## விற்பனைக்கு

நீளம் 14 அடி உயரம் 6 அடிகொண்ட பாலைக் குத்துக்கால்கள் இரண்டு, பனைவளைகள் ஏழு, ஆறு முழுபனைமரங்கள்.
**அம்மன் தேவஸ்தானம், கலட்டி,**
**அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.** (62591)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி மேரி கிறேஸ் பற்றிமா**
அவர்களின் அன்பு மகள்
**செல்வி ஜெனற் மாற்றா சாந்தி**

அவர்களின் திடீர் மரணம் குறித்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். இவரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் (சி/52892)


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:-16/07/2007 - 09.00AM
ஏனைய அனைத்துக்கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.


## Post of General Manager CANE Jaffna

Cancer Aid for North and East (CANE) is a U.K registered charity.

The aim of CANE is to provide, palliative and medical care as well as assistance to cancer patients and their carers /relatives, in the North and East of Sri Lanka.

We are also involved in cancer prevention and diagnostic activities. **We are proposing to expand these activities.**

CANE Jaffna is currently runs an in patient Hospice for respite and terminal care for cancer sufferers. We are also involved in Mobile Hospice and Home Care activity and a Day Care Centre is to be opened soon.

We need an experienced General Manager, with managerial skills, public relations skills, basic computer skills and ability to handle complaints of staff and patients.

The Manager's work will involve the management of the hospice and field activities of CANE.

The appointment will initially be on a contract basis for one year and the total remuneration will be Rs. 25,OOO. per month for a full time post and pro-rata for part time over 5 days in a week.

Please send in your applications with CV by **30th July 2007** by registered post -

To **President. CANE Jaffna Hospice. Sabapathipillai Road. Uduvil, Chunnakam, Jaffna.** Please write, "Application for the post of General Manager" on the left hand corner of the envelope

You can also Email your applications to:canejaffna@yahoo.com

President, CANE Jaffna Hospice. (62449)

## அறிவித்தல்

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

**ஊர்காவற்றுறை**
**கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்**

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20:2 இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக இந்த அட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை சகல உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கிறோம்.

கிளைப் பொதுச்சபைக்கூட்ட ஆரம்பம் 28-07-2007 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

| தொ. இல. | கிளை இல. | கிளைப்பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | 94 | ஊர்காவற்றுறை | அன்னை முன்பள்ளி, ஊர்காவற்றுறை. |
| 02. | 95 | ஒழுவில் | நாரந்தனை (றோ.க.) பாடசாலை. |
| 03. | 96 | நாரந்தனை | பொதுமண்டபம், நாரந்தனை தெற்கு. |
| 04. | 99 | எழுவைதீவு | கிராம அபிவிருத்திச்சங்கம், எழுவை தீவு. |
| 05. | 101 | காம்புறோட் | கிராம அபிவிருத்திச்சங்கம், அயித்தாம் புலம். |
| 06. | 102 | நாரந்தனை வடக்கு | சங்கத்தலைமைப் பணியகம். |
| 07. | 103 | நாரந்தனை கிழக்கு | நாரந்தனை (றோ.க) ஆரம்பப் பாடசாலை. |

திகதி
09-07-2007

**சி.சுபேந்திரன்**
கௌரவ செயலாளர்,
ஊர்.ப.தெ.வ.அ.கூ.சங்கம் (வ.து). (சி/52884)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் கரங்களில்
12 - 01 - 1935



சிவனின் பாதங்களில்
23 - 06 - 2006

**அமரர் வேலுப்பிள்ளை தியாகராசா**

(ஊர்காவற்றுறை, காரைநகர், சிவலிங்கபுளியடி, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க திரயோதசி

எம் நெஞ்சிருக்கும் வரை உங்களின் பசுமையான
நினைவுகள் நீங்காதிருக்கும்
உங்களின் ஆத்மா சாந்தி அடையும்வரை
எல்லாம்வல்ல
ஈழத்து சிதம்பரத்தின் சிவனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 07, மதவடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
**அமரரின் குடும்பத்தினர்.**
(62619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சந்திரிகா வழியில் மஹிந்தரும் 'வெற்றிப் பட்டயம்' பெறுகிறார்

தொப்பிகல காட்டுப்பகுதியை இலங்கை அரசுப் படைகள் முழுமையாகக் கைப்பற்றிவிட்டன என்ற குதூகல அறிவிப்பு நேற்று தென்னிலங்கையில் மகிழ்வோடு வெளியிடப்பட்டது.

தொப்பிகல மீட்போடு கிழக்கு மாகாணம் முழுமையாக அரசுப் படைகள் வசம் வந்துவிட்டன என்றும் தெற்கில் சந்தோஷம் கொண்டாடப்படுகின்றது.

தொப்பிகல ஆக்கிரமிப்புடன் கிழக்கு மாகாணம் முழுவதும் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது என்ற கூற்றின் உண்மைத் தன்மையை - நிஜ நிலைமையை - காலம் தான் உறுதிப்படுத்த வேண்டும். முழுவதுமாக மீட்பு என்ற திருப்திக்குப் பின்னால் ஒளிந்து கிடக்கக்கூடிய பூரணத்துவத்தை அல்லது ஓட்டைகள், ஒழுக்குகளை கால ஓட்டம்தான் நமக்கு வெளிப்படுத்தும்.

அது எப்படி இருந்துவிட்டும் போகட்டும். இன்றைய நிலையில் தமிழர் தாயகத்தின் தென் பிரதேசத்தை வடபுறத்திலிருந்து துண்டித்த மஹிந்தர் அரசு, அந்தத் தென் பகுதியைத் தனது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டதாகக் கருதி பூரித்து நிற்கின்றது என்பதே யதார்த்தம்.

இது தொடர்பான கொண்டாட்டத் திருவிழாவை எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடத்துவதற்கான ஏற்பாட்டை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு செய்து வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொள்வார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிகழ்வின் பின்னணியில் புதைந்துள்ள மூன்று விடயங்களை நாம் அவதானிக்க வேண்டும்.

ஒன்று - இந்நிகழ்வு நடைபெறும் இடம். அடுத்தது - இந்நிகழ்வை நடத்தும் அமைச்சு. மூன்றாவது - இந்நிகழ்வில் பங்குபற்றும் அரசுத் தலைவர்.

சுதந்திர சதுக்கத்தில் இந்தக் கொண்டாட்டம் நடைபெறப் போகின்றது. வழமையாக நாட்டின் சுதந்திரதின நிகழ்வை ஒழுங்குசெய்யும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு இதனை ஏற்பாடு செய்துள்ளது. இலங்கைத் தீவின் தலைவரே - ஜனாதிபதியே - இந்நிகழ்வில் முக்கிய அதிதியாகவும் கலந்துகொள்கின்றார்.

ஆக, நாட்டின் ஒரு சுதந்திரதின நிகழ்வாக இது அமையப் போகின்றது. தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவில் மாறாத வடுவாக அமையும் ஓர் ஆக்கிரமிப்பை தென்னிலங்கை பெருவிழாவாகக் கொண்டாடுகின்றது.

1995 இறுதியில் யாழ். குடாநாட்டின் ஒரு பகுதியை இதேபோல இலங்கைப் படைகள் கைப்பற்றியபோதும் தெற்கில் இதே மாதிரியான ஒரு விழா எடுக்கப்பட்டது.

ஓர் அரசனின் படைகள் அயல் தேசத்தை அல்லது பிற நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றினால் அது தொடர்பான வெற்றிப்பட்டயத்தை சம்பந்தப்பட்ட படைத்தளபதி, அந்த அரசனிடம் வீரபுருஷனாக நின்று ஒப்படைப்பதை பெரு விழாவாக முன்னாளில் கொண்டாடுவர்.

அதுபோல, யாழ். குடாநாடு என்ற 'அயல் தேசத்தை' கைப்பற்றியமை தொடர்பான வெற்றிப்பட்டயத்தை, அரச படைகளின் அப்போதைய வழிகாட்டியான பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு பெருங் கொண்டாட்ட மாகத் தெற்கில் அச்சமயம் நடத்தப்பட்டமை பலருக்கும் நீங்காத நினைவாக மனதில் இருக்கலாம்.

இந்நிகழ்வு குறித்து பின்னர் ஒரு தடவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு நெருங்கியவர்களிடம் வேதனையுடன் கருத்து வெளியிட்டார் எனத் தெரிகின்றது.

*''நான் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியமை தவறல்ல. ஆனால் அயல் தேசத்தைக் கைப்பற்றியமை போல நான் அதைக் கொண்டாடியமை தவறு. தங்கள் பிரதேசத்தை சிங்கள மக்கள் ஆக்கிரமித்துக் கைப்பற்றி மகிழ்கின்றார்கள் என்ற சினத்தையும் எரிச்சலையும், நீங்காத மனவேதனையாக அந்நிகழ்வு தமிழர் மனதில் ஏற்படுத்தியதை நான் உணர்கிறேன். இத்தகைய நிகழ்வுகள் தமிழ் மக்களை என்னிடமிருந்து தள்ளி வைத்துவிட்டன.''* - என்று பின்நாளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறி மன வேதனைப்பட்டார் என அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன.

அதே தவறை இப்போது செய்ய முயல்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும்.

இலங்கை அரசின் அதிகாரத்தையும் இறைமையையும் விஸ்தரித்து நிலைநிறுத்தியமையை ஒட்டி நடத்தப்படும் வெற்றித்திருவிழாவாக இது தெற்கில் அடையாளப்படுத்தப்படுகின்றது.

ஆனால் தமிழ்த் தேசியத்தின் மனதில் அப்படி அமையப் போகும் நிகழ்வல்ல இது.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்தரிடம் - தென்னிலங்கை பார்த்து மகிழ்ந்திருக்க - கையளிக்கப்படப் போகும் 'வெற்றிப்பட்டயம்' தமிழர்களைப் பொறுத்தவரை, அவர்களின் சமூக வாழ்வு மீது தலையில் அறையப்பட்டுள்ள அடிமைப் பட்டயத்தின் மற்றொரு அத்தியாயமே.

ஈழத் தமிழர் தேசத்தை ஆக்கிரமித்த அந்நிய சக்திகள், கடைசியாக 1948 இல் இலங்கைத் தீவிலிருந்து வெளியேறிய போது, அதுவரை தம்வசம் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழரின் சுதந்திர இறைமையை, 'நாட்டின் சுதந்திரம்' என்ற பெயரில் இலங்கைத் தீவின் பெரும்பான்மையிடம் கையளித்துச் சென்றன.

அந்த அடிமை சாசனப் பட்டயத்தை மீண்டும் ஒரு முறை தூசு தட்டி, மீட்டுப் பார்க்க இத்தீவின் பெரும்பான்மையினர் முயல்கின்றனர். அந்த நிகழ்வே 19 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

ஆனால் அக்கொண்டாட்டத்தோடு இந்த அடிமைப் பட்டய விவகாரம் அடங்கிப் போய்விடாது. அதற்குப் பின்னர்தான் விவகாரமே இருக்கின்றது. அதற்குக் காத்திருப் போமே - பார்த்திருப் போமே.....!

# வாக்குறுதி அளித்தவாறு ஆயுதக்குழுக்களை மஹிந்தா நிராயுதபாணிகள் ஆக்கவில்லை

## அதனாலேயே புலிகளும் அரசும் மோதத் தொடங்கினவாம்

கொழும்பு, ஜூலை 12

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக தேர்தலுக்கு முன்னர் பலகோடி ரூபாக்கள் அரசினால் புலிகளுக்கு கொடுக்கப்பட்டன. தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அரசு புலிகளுக்குக் கூறியது போன்று கருணா குழுவினரையும் ஏனைய ஆயுதம் தாங்கிய குழுக்களையும் நிராயுதபாணிகளாக்கவில்லை. இதனால் ஆத்திரம் கொண்ட புலிகளுக்கும் அரசுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

புலிகளுக்கு அரசு நிதி வழங்கியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவே இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள உடனடியாக நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். இனிமேலும் காலம் தாழ்த்துவது கூடாது.

- இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

ஜெனிவாவில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சின்போது அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பயங்கரவாதத்துடன் அரசு ஒருபோதும் கைகோர்க்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

பின்னர் அப்பேச்சில் கலந்துகொண்ட மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ புலிகளின் இரண்டு கோரிக்கைகளுக்கு இணங்கினார்.

கருணா குழுவினரையும் ஏனைய ஆயுதம் தாங்கிய குழுக்களையும் நிராயுத பாணிகளாக்குவதற்கும் புலிகளுக்கு நிதி கொடுப்பதற்கும் அவர் இணங்கினார் என்று முன்னாள் பிரதி அமைச்சர் சிறிபதி சூரியாராய்ச்சி நாடாளுமன்றில் தெரிவித்தார்.

### புலிகளின் கோபத்தை தணிக்க மிகுதிப் பணம்

பின்னர் 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி புலிகள் மாவிலாறு பகுதியில் தங்களது யுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர். இதே வேளை, கிளிநொச்சிப் பகுதியில் 1,200 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு 750 மில்லியன் ரூபா செலவிடுவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் புலிகளின் கோபத்தைத் தணிக்க மிகுதிப்பணம் கொடுக்கப்பட்டது.

பெருந்தொகையான பணம் கிளிநொச்சியில் இருக்கும் புலிகளின் பிரதிநிதியான எமில் காந்தனுக்கும் அவரது மனைவி மற்றும் சகோதரருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. எமில் காந்தன் அரச இராணு வத் தினரால் தேடப்படும் புலி உறுப்பி னர் என்பது தெரிந்ததே.

அரசு புலி களுக்குப் பணம் கொடுத்துள்ளது என்பதற்கு சாட்சி இருந்தால் நாடாளுமன்றில் தெரிவுக் குழுவை அமைக்க நாம் இணங்குவோம் என்றார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.



சாட்சிகள் எம்மிடம் உள்ளன. உடனடியாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்க வேண்டும். அப்போது ஆதாரங்களுடன் நாம் அதனை நிரூபிப்போம்.

ஊடகவியலாளர்களை முடக்கும் குற்றவியல் அவதூறு சட்டத்தைக் கொண்டுவர அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டு வருகிறது. அரசின் மோசடிகள் குறித்து ஊடகங்களில் செய்தி வெளியிடுவதற்கு தடை ஏற்படுத்துவதற்கே இதனை அரசு மேற்கொள்கிறது - என்றார். (சி)

# மங்கள சமரவீரவின் இந்தியப் பயணம் தாமதம்

கொழும்பு,ஜூலை 12

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் ஏற்பாட்டாளர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோர் அடுத்த வாரமே இந்தியாவுக்கு பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் இந்திய அரசுத் தலைவர்களுடனான சந்திப்புகளுக்கு அனுமதி பெற்றுக்கொள்ளும் முயற்சியில் மங்கள சமரவீர தற்போது ஈடுபட்டிருக்கிறார் என்று அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. சந்திப்புகளுக்கான அனுமதி கிடைத்ததும் மங்களசமரவீர, சிறிபதியுடன் புதுடில்லி புறப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

# முகாமைத்துவ கற்கைநெறி மீள் பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத் துவ கற்கைகள் வணிக பீடத்தின் சகல ஆண்டுகளுக்கான பழைய பாடத்திட்ட மீள் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாக விருக்கின்றன. இந்தப் பரீட்சைகளின் நேர அட்டவனை தொடர்பான விவரங்களை பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

# கைகள் கட்டப்பட்டு சூட்டுக் காயத்துடன் குடும்பஸ்தரின் சடலம் நாயன்மார்கட்டில் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 12

கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியில், நாயன்மார்கட்டுச் சந்திக்குச் சமீபமாக, நேற்று நள்ளிரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் கூலித் தொழிலாளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டது. இருபாலை, விநாயகர் வீதியில் வசித்துவந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியாகராஜா வசிகுமார் (வயது 30) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தினார்.

நேற்றுமுன்தினம் வசிகுமாரின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகள், கோடரியால் வீட்டுக் கதவை உடைத்து அவரைக் கடத்திச் சென்றனர் என்றும் -

பெரும் சித்திரவதைக்குப் பின் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்றும் - விசாரணைகளில் தெரியவந்தது.

கைகள் பின் பக்கமாகக் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சடலத்தில் பல இடங்களில் அடிகாயங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-203-68-15-77)

# மிதிவெடி அபாயக் கல்வி விழிப்புனர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 12

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம், யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மிதிவெடி அபாயக் கல்வி விழிப்புணர்வுக் கருத்தரங்கை இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தில் நடத்தவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கே இக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (1)

# சமுர்த்தி புலமைப்பரிசில் நாளை மறுதினம்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

சமுர்த்தி 'சிப்தொற' இரண்டாம் நிலைக் கல்விப் புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்குவார்.

சமுர்த்தி நலன் பெறும் வறிய குடும்பங்களில் இருந்து.இரண்டாம் நிலைக் கல்வியைப் பெறும் 269 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சான்றிதழ் பெறுவோார் விவரம் நாளைய உதயனில் வெளியாகும். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 29 | வெள்ளிக்கிழமை 13.07.2007 |
| திதி : சதுர்த்தசி | முன்னிரவு 07.47 |
| நட்சத்திரம் : | |
| மிருகசீரிடம் | காலை 06.00 |
| திருவாதிரை | பின்னிரவு: 05.18 |
| [illegible] | [illegible] - 07.29 |
| [illegible] | 10.29 - [illegible] |

# மோட்டார் சைக்கிளில் வந்து வழிப்பறி செய்யும் கோஷ்டிகள்

## *நீர்வேலி, கோப்பாய்ப் பகுதிகளில் அட்டகாசம்*

நீர்வேலி, ஜூலை 12

நீர்வேலி, கோப்பாய், பிரதேசங்களில் பட்டப் பகலில் வழிப்பறிக் கோஷ்டிகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

மோட்டார் சைக்கிள்களில் வரும் இந்த கொள்ளைக் கோஷ்டியினர் வழிகளில் செல்லும் பெண்களை மறித்து தங்க நகைகளை அபகரித்துக்கொண்டு தப்பிச் செல்லும் சம்பவங்கள் கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளன.

கடந்த வாரம் கோப்பாய் இராச வீதியில் சென்ற பெண் ஒருவரை வழி மறித்து அவரின் தாலிக்கொடி மற்றும் தங்க ஆபரணங்களை மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த கொள்ளையர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நீர்வேலி தெற்கு விவசாய வீதியூடாக சென்ற பெண் ஒருவரையும் மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர் அந்தப் பெண்ணை வழிமறித்து தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்து கொள்ளையிடுவோரின் தொல்லை இப் பிரதேசங்களில் பட்டப் பகல்வேளைகளில் அதிகரித்திருப்பதால் பெண்கள் வீதிகளில் செல்வதற்கு அஞ்சுகின்றனர். (அ-1-224)

# இன்றைய முக்கியமான தேவை என்ன?

இறைவனை அடைய வேண்டுமானால், இருக்கும் தெய்வீகத்தை உணர வேண்டுமானால், உன்னையே நீ புரிந்துகொள்ள வேண்டுமானால் நிர்மலமான பிரேமையை வளர்த்துக்கொள்ளவேண்டும். இந்த அன்பே அனைவரையும் கட்டிவைக்கும் கயிறு. இதைத்தான் பிரேமபாசம் என்றனர்.

உங்கள் அனைவரிடமும் அன்பு இருக்கிறது. அதைக் குறைந்தது பத்துப் பேரிடமாவது பகிரிந்துகொள்ளுங்கள். உடனிருப்பவரிடம் அன்பைச் செலுத்தி அந்த ஆனந்தத்தை அனுபவியுங்கள். பிரேமை என்பது ஒரு வழிப் பாதை அல்ல. கொடுத்து வாங்குதல் என்னும் இருவழிப் பாதை.



அன்பு என்கின்ற நிரந்தர பிரேமையை நீங்கள் வளர்த்துக் கொள்ளும்போது அது கோபம் முதலிய களைகளை வேரோடு கிள்ளி எறிந்துவிடும். அமைதியும் ஆனந்தமும் மனிதனுள் மலரும். எனது அறிவுரைகள் அனைத்தும் பிரேமையே. என் செயல்கள் அனைத்தும் பிரேமையின் வெளிப்பாடுகளே. என் வாழ்க்கை முழுதும் பிரேமைமயமே. மனிதனின் பிடிக்குள் நான் சுலபமாகச் சிக்குவதற்கு பிரேமையைத் தவிர விலையுயர்ந்த வேறொன்றுங் கிடையாது.

## சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலம்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த 9 பேர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

**இரு கால்களும் துண்டிக்கப்பட்டன**

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளோரின் விவரம் வருமாறு:-

அ.அகிசன் (வயது 1), அ.அலையரசி (வயது 4), பிரேமதாஸ் பிரேம்குமார் (வயது 16), கிட்ணபிள்ளை சிவதாசன் (வயது 19), கிட்ணபிள்ளை சரத்குமார் (வயது 13), தியாகராசா (வயது 60), அல்பிரட் (வயது 55), சிவராசா (வயது 35), ஏ.வேதநாயகம் (வயது 48)

இவர்களில் பிறேம்குமார் இரு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெறுகின்றார்.

விமானக் குண்டுவீச்சால் அங்குள்ள வேளாங்கன்னி தேவலயம் சேதமடைந்தது. இரு மீன்பிடி வாடிகளும் ஒரு படகும் முற்றாக அழிந்துள்ளன. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கிருந்த குடியிருப்புக்களும் பெரும் சேதமடைந்தன.

மீனவர்கள் தமது தொழில் முடிந்து கரையில் மீன்களை சேகரித்துக்கொண்டிருந்த வேளையிலே கிபிர் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

(அ-1)

## தொப்பிகல வெற்றி குறித்து சபையில் விவாதம் நடத்துக!

**சபாநாயகருக்கு ஜே.வி.பி. கடிதம்**

''தொப்பிகல இராணுவ வெற்றி குறித்து நாடாளுமன்ற விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும்'' - இவ்வாறு ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு படையினர் மேற்கொண்டுள்ள வெற்றி குறித்து வாழ்த்துக்களை தெரிவிக்க வேண்டும். இது நாட்டு மக்கள் அனைவரினதும் கடமை என்று குறிப்பிட்டுள்ளார்.

## பேச்சுக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஓமந்தை சோத னைச் நிலையம் ஊடாக கிளிநொச்சியை வந்தடைந்தார். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரோடு பிரட்ஸ்கர் சுமார் ஒன்றரை மணிநேரம் பேச்சு நடத்தினார்.

அரசியல்துறை நடுவப் பணியகத்தில் முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரை இச்சந்திப்பு நடைபெற்றது.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், இராணுவப்பேச்சாளர் இராசையா இளந்திரையன், சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன், மனித உரிமைகள் விவகாரங்களுக்கான பேச்சாளர் ந.செல்வி மற்றும் நோர்வேத் தூதரக செயலாளர், துணைச்செயலாளர் ஆகியோரும் இச்சந்திப்பில் உடனிருந்தனர்.

சுமார் மூன்று மாதங்களுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆலோசனை நடத்தியுள்ளார். எதிர்வரும் மாதம் நோர்வேத் தூதுவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் அவர் நோர்வே திரும்புகின்றார்.

இச்சந்திப்பு தொடர்பாக ஹான்ஸ் பிரட்ஸ்கர் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் நோர்வேத் தூதரகம் வழமையாக நடத்தும் மாதாந்த சந்திப்புகளில் ஒன்றாகவே இன்றைய சந்திப்பு நடைபெற்றது.

பேச்சை மீளத் தொடங்கவேண்டும் என்பதில் நோர்வே ஆர்வமாக உள்ளது.

**இணைத் தலைமை நாடுகளின் விருப்பம்**

விடுதலைப்புலிகளும் ஸ்ரீலங்கா அரசும் மீண்டும் பேச்சுகளைத் தொடங்க வேண்டும் என்பதுதான் கடந்த ஜூன் 26 ஆம் திகதி நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் கூடிய இணைத்தலைமை நாடுகளின் விருப்பம்.

எதிர்வரும் 15 நாட்களில் நோர்வேயின் புதிய தூதுவர் பதவியேற்பார்.

- இவ்வாறு பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, இலங்கை தொடர்பான அனைத்துலக நாடுகளின் நிலை, பாதுகாப்பு மனிதாபிமான மற்றும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக நேற்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரியவந்தது.

நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் பதவி விலகிச் செல்வதால் அவருக்கு நினைவுப் பரிசில் ஒன்றை தமிழ்ச்செல்வன் வழங்கினார் எனத் தெரியவந்தது.

இதேவேளை -

நேற்றைய சந்திப்புக்குப் பின்னர் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களைச் சந்திக்கவில்லை. கொழும்பில் இருந்து நோர்வேத் தூதருடன் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் சிலரும் கிளிநொச்சி சென்றிருந்தனர். எனினும், அவர்கள் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்க காத்திருந்த போதும் அது கைகூடவில்லை.

(சி)

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவம் இருக்கின்றது.

இந்தப் பகுதியில் நாங்கள் பல வாரங்களுக்கு முன்னரே கெரில்லாப் போர் முறைக்கு எங்களுடைய போர் உத்தியை மாற்றிவிட்டோம். கிழக்கைப் பொறுத்தவரை நிலப்பரப்பைப் பிடிப்பது என்பது எங்களுக்கு முக்கியமானது அல்ல.

நிச்சயமாக இலங்கைப் படையினர் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். பெரும் நிலப்பரப்பை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்கள்.

பெரும் விஸ்தீரணமான நிலப்பரப்பில் துருப்புக்களை நிலை நிறுத்துவது என்பதும் -

அதில் ஏதும் ஒரு சம்பவமும் நடைபெறாமல் பார்த்துக்கொள்வது என்பதும் இரு வேறுபட்ட விடயங்கள்.

எனவே, எதிர்காலத்தில் எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

எமது மக்களை இந்த அடக்குமுறை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்க முடியவில்லை- என்றவகையில் இது ஒரு பின்னடைவுதான் -

தொடர்ச்சியாக வந்த இலங்கை அரசுகள் இதனை முயற்சி செய்தன. ஆனால், அனைவரும் இதில் தோல்வி அடைந்துவிட்டனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதல் சந்திரிகா பண்டாரநாயக்கா வரை அனைவரும் இதில் தோற்றுப் போய்விட்டார்கள்.-

தற்போது இது ராஜபக்ஷவின் தருணம். அவர் தனது முயற்சியை செய்கின்றார்.

இதுவொரு இராணுவ ரீதியான முன்னேற்றகரமான நிலை என்று நான் கருதவில்லை. ஏன் என்றால், நீங்கள் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டைப் பெறவேண்டும் என்றால் நீங்கள் அடுத்த பகுதியின் கட்டுப்பாட்டை இழக்கவேண்டி நேரிடும் -

ஆகவே, அவர்கள் ஒருவகையில் செயல்பட முயற்சிக்கின்றபோது அதற்கு ஏப நாங்கள் எங்களது பாணியை அதாவது யுத்தியை மாற்றுவோம்.

எங்களுடைய யுத்தியை மாற்றும் பாணி என்று கூறுவது ஒரு பிராந்தியத்தைப் பொறுத்தவரை நாங்கள் எதிரியை மரபு ரீதியாகவோ அல்லது மரபு சாராத முறையிலோ எதிர்கொள்வதேயாகும்.- என்றார் இளந்திரையன்.

(சி)

## வீடுகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணன் (வயது 19), யாழ்.இந்துக் கல்லூரியில் கலைப்பிரிவு உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் யாழ்.பிறவுண் வீதியைச் சேர்ந்த நாகராசா வேணுகானன் (வயது 19), யாழ். இந்துக் கல்லூரியில் கணிதப் பிரிவில் கல்வி பயிலும் திருநெல்வேலியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் யசோதரன் (வயது 17) ஆகியோரே கடந்த மே மாதம் 4ஆம் திகதி கடத்தப்பட்டிருந்தனர்.

இரண்டு மாதங்களுக்கு மேலாக - 69 நாள்களின் பின்னர் அவர்கள் நேற்று இரவு வீடுகளுக்கு அருகில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களை விடுவிக்குமாறு கோரி யாழ்.மாவட்டத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கல்விமான்கள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள் இவர்களை விடுவிக்குமாறு கோரியிருந்தனர்.

மே மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற பத்திரிகை ஆசிரியர் சந்திப்பின்போது மாணவர்களை விடுவிக்க விசாரணைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

இதுவிடயமாக பாதுகாப்பு அமைச்சிடம் அறிக்கை கோரியுள்ளதாகவும், பாதுகாப்புக் கவுன்ஸிலில் இதுபற்றி ஆராயப்பட இருப்பதாகவும், ஜனாதிபதி அப்போது கூறியிருந்தமை தெரிந்ததே.

(அ-1)

## நெடுந்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த சத்யா (30 வயது) என்பவரே கைதானவராவார்.

இவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் படகு மூலமாக தமிழகத்திற்கு சென்றுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

(சி)

## புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தையும் எமது கட்டுப்பட் டுக்கள் கொண்டுவந்துவிட்டோம்.

இது ஒரு பெரிய பகுதி இதைப் படையினர் மீட்கும்போது சற்று எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. ஆனால், இப்போது நிலைமை படையினரின் முழுமையாக எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது.

அழிவை உண்டாக்க ஒரு பயங்கரவாதிபோதும். தாக்குதல் நடக்காது என்று நாங்கள் நிராகரிக்க மாட்டோம். ஆனால், புலிகளின் தலைமையகம் தொப்பிகல என்றே கருதப்பட்டது.

மீட்கப்பட்ட பகுதியில் அடுத்து மறுவாழ்வு மற்றும் முன்னேற்ற திட்டங்களை அமுல்படுத்த உத்தேசித்துள்ளோம் -

தேவை ஏற்படின் பயங்கரவாத அழுத்தம் ஏற்பட்டால் பயங்கரவாதிகள் மக்களைத் துன்புறுத்தி படையினருக்கு தொல்லை கொடுத்தால் வடக்குப் பற்றி அப்போது முடிவு செய்யப்படும் - என்றார்.

(க - 09)

## தொப்பிகல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்து விட்டார்கள்தான். எனினும் நாம் அங்கு இன்னமும் செயற்படு கின்றோம். -

நாம் இயன்ற எல்லாவகை வழிமுறைகளையும், உத்திகளையும் தந்திரோபாயங்களையும் ஆயுதங்களையும் கையாள்வோம்-

அவர்கள் விரும்பினால் வடக்கே வரட்டும். எங்கே வரட்டும் பார்ப்போம். வந்து என்ன நடக்கும் என்பதைப் பார்க்கட்டும் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந் திரையன் நேற்று கிளிநொச்சியில் வைத்து ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

**ஊடகத் தகவல் நிலைய அறிவிப்பு**

நேற்றுக்காலை பொழுது புலரும் வேளை அரசுப்படைகள் தொப்பிகல பகுதிக்குள் நுழைந்து அதன் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்டன என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது. புலிகளின் தளங்களில் அவர்கள் கைவிட்டுச் சென்றவை என்று கூறப்படும் கனரக ஆயுதங்கள் சிலவற்றின் படங்களையும் ஊடக நிலையம் வெளியிட்டது.

எனினும் அந்தப் பகுதிகளில் ஒளிந்திருக்கும் புலிகளைத் தேடி அழிக்கும் பணியில் இராணுவம் ஈடுபட்டிருப்பதால் சிறுசிறு மோதல்கள் இன்னமும் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிலமாதகால மோதல்களுக்குப் பின்னர் விடுதலைப்புலிகளைச் சந்திப்பதன் மூலம் முடங்கிவிட்ட சமாதான முயற்சிகளுக்குப் புத்துயிரளிக்க நோர்வே முயன்று கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் தொப்பிகல மீட்பு கைகூடியுள்ளது. - என்று வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் குறிப்பிட்டன.

தொப்பிகல வனாந்தரத்தில் உள்ள இந்தத் தளம் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும் பொழுது புலர்வதற்கு முன்னர் இது இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது நேற்று நண்பகல் விடுக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிந்திய நடவடிக்கைகள் தொடர்பாக இதர தகவல்கள் அதில் வெளியாகவில்லை.

''கொமாண்டோக்களும் இராணுவ வீரர்களும் சில மணித்தியாலங்களுக்கு முன்னர் தொப்பிகல வனாந்தரத் தளத்தை அடைந்தார்கள்.'' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்த வெற்றியோடு கிழக்கு மாகாணத்தில், தமிழீழ விடுதலைப்புலிகளின் பலமிக்க இறுதிப் பகுதியில் அவர்களின் கேந்திர மத்திய நிலையமான தளத்தையும் துருப்புகள் கைப்பற்றியுள்ளன'' என்றும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது.

''வெற்றியடைந்துள்ள இராணுவத்தினர் அடர்ந்த காட்டுக்குள் சிதறிக் கிடக்கும் எதிரிகளின் சிறுசிறு பகுதிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். அதேவேளை தேடுதல் வேட்டையையும் மேற்கொண்டுள்ளார்கள்.''

எனினும் இரு தரப்பு சேத விவரங்கள் வெளியிடப்படவில்லை.

**நாளுக்கு ஓர் அறிவிப்பு**

தொப்பிகல வனாந்தரப்பகுதிகளில் இராணுவப் பிரவேசம் விடுதலைப்புலிகளின் பலத்த எதிர்ப்பால் பின்னடைவைத் தழுவியுள்ளது என, முதல்நாள் அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தார்கள். மறுதினமான நேற்று, இப் புதிய மீட்புத் தகவல் வெளியாகியுள்ளது.

அரசபேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த இராணுவ நடவடிக்கை குறித்துக் குறிப்பிடுகையில், ''எல்லையில் 98 சதவீதத்தைக் கைப்பற்றி விட்டோம். எஞ்சியது இரண்டு வீதந்தான். சில நாட்களுக்குள் இதனைமீட்டுவிடலாம் என்பதற்கில்லை'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

''தொப்பிகல வெகு விரைவில் வீழ்ச்சி கண்டுவிடும்'' என்ற தகவல்களையும் அவர் நிராகரித்திருந்தார்.

இராணுவப்பேச்சாளர் பிரசாத் சமரசிங்க, செவ்வாய்க்கிழமை பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில், ''தொப்பிகலவிலிருந்து ஐந்து முதல் ஆறு கிலோமீற்றர் தொலைவிலேயே துருப்புகள் நிலை கொண்டுள்ளன. தொப்பிகலவின் துண்டாடப்பட்ட பகுதிகளிலிருந்து தீவிரவாதிகள் இன்னும் எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டே வருகிறார்கள்'' எனத் தெரிவித்திருந்தார்.

**பிரிகேடியர் பகலில் சொன்னது**

இதேவேளை -

தொப்பிகல பிரதேசத்தை கைப்பற்றியிருப்பது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்றுப் பகல் தகவல் வெளியிட்டபோது கூறியவை வருமாறு:-

கடந்த பெப்ரவரிமாதம் 24 ஆம் திகதி தொப்பிகலவை கைப்பற்றும் நடவடிக்கையை எமது அரசபடைகள் ஆரம்பித்தன. அன்றிலிருந்து படிப்படியாக அப்பகுதி இராணுவக் காட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

தற்போது அப்பகுதி முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையின் போது இதுவரை 103 புலி உறுப்பினர்கள் எம்மிடம் சரணடைந்துள்ளனர், 211 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது சடலங்களைக் கண்டெடுத்துள்ளோம். எமது படைத்தரப்பில் 18 பேர் இந்த இராணுவ நடவடிக்கையின்போது உயிரிழந்துள்ளனர். 68 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

தற்போது தொப்பிகல முழுமையாகக் கைப்பற்றப்பட்டு இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் கிழக்கு காட்டுபகுதிக்குள் தப்பியோடி ஒளிந்திருக்கும் புலிகளைத் தேடும் நடவடிக்கையில் இராணுவத்தினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர் - என்றும் தெரிவித்தார்.

(அ-சி)

2007 A/L 2007 A/L 2007 A/L
மாதிரிப் பரீட்சையும் கருத்தரங்கும்
அரசறிவியல் By: அசோக் B.A(Hons) 16.07 முதல் 21.07. வரை
வணிகக் கல்வி By: நந்தீஸ் B.B.A(Hons) Dip.in Ed
Exams Part I : 12.7 1p.m. - 4 p.m.
Part II : 15.7 1p.m. - 4 p.m.
வெளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு:
SUBRA [14] சித்தன்கேணி

A/L 2007 இந்து நாகரிக
மாணவர்களுக்கான கருத்தரங்கு
14.07.2007 (சனி), 15.07.2007 (ஞாயிறு)
பிற்பகல் 1 - 4 மணி
விரிவுரையாளர்கள்:
★ சைவப்புலவர். கந்த.சத்தியதாசன் B.A (Hons) Hin. Spl., Dip. in Ed. (ஆசிரிய ஆலோசகர்)
★ P.சந்திரன் B.A (Hons)Hin.Spl. (விரிவுரையாளர்)
★எதிர்பார்ப்பு வினாக்கள்
★விடையளிக்கும் முறைகளும் புள்ளித் திட்டமும்
★பயிற்சிக் குறிப்புகள் ★ மாதிரிப் பரீட்சைகள்
★கலந்துரையாடல்
★வெளி மாணவர்களும் அனுமதி பெறலாம்.
★100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.

வணிகக் கல்வி
பகுதி 11
A/L 2008
ஆரம்பம்: சனி காலை 9 மணி
2008
சனி, ஞாயிறு காலை 9-10 11-12
ஆசிரியர்: V.முரளி B.B.A (Fm spl)
பொருளியல் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.